சுருக்கம்

பணியமைப்பு – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – தமிழ்நாடு ஊரக வளர்ச்சிப் பணி– ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் நிலையில் தகுதி வாய்ந்த அலுவலர்களை, தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணி விதிகளில், பொது விதி 39(a)(i)ன்கீழ் தற்காலிகமாக ஊரக வளர்ச்சி இணை இயக்குநர்களாகப் பதவி உயர்வு அளிக்க தற்காலிகப் பெயர்ப் பட்டியல் வெளியிடுதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ1) துறை

அரசாணை (ப) எண்.84 நாள் 22.2.2010

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (ப) எண்.258, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ1)துறை, நாள் 15.5.2009.
2. அரசாணை (4டி)எண்.2, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ1)துறை, நாள் 8.6.2009.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் கடித எண்.30903/09/GE 1.1, நாள் 16.11.2009.
4. அரசு கடிதம் எண்.26552/இ1/09, நாள் 21.12.2009.
5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் கடித எண்.30903/09/GE 1.1, நாள் 21.12.2009.
6. அரசாணை (ப) எண்.689, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ1)துறை, நாள் 23.12.2009.
7. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் கடிதம் எண்.30903/09/ஜி.இ 1.1, நாள் 16.1.2010

---

ஆணை:

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் 2009–10ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு ஊரக வளர்ச்சிப் பணியில் ஊரக வளர்ச்சி இணை இயக்குநர் பதவிக்கு, காலியிட மதிப்பீடு 17 என நிர்ணயிக்கப்பட்டதன் அடிப்படையில் மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், 17 நபர்கள் கொண்ட ஊரக வளர்ச்சி இணை இயக்குநர் தற்காலிகத் தேர்ந்தோர் பெயர்ப்பட்டியல் வெளியிடப்பட்டு, அந்த தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலில் இடம்

…2

பெற்ற அனைவருக்கும் பதவி உயர்வு அளிக்கப்பட்டுவிட்டது. இதனைத் தொடர்ந்து ஊரக வளர்ச்சி இணை இயக்குநர் நிலையில் ஏற்பட்ட காலியிடங்களை நிரப்ப நான்கு ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் நிலை அலுவலர்களுக்கு பொதுவிதி 39(a)(i)ன் அடிப்படையில் தற்காலிகமாக ஊரக வளர்ச்சி இணை இயக்குநர்களாகப் பதவி உயர்வு அளித்து மேலே ஆறில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டு அனைவருக்கும் ஊரக வளர்ச்சி இணை இயக்குநர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டுவிட்டது.

2. மேலே ஏழில் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், 31.12.09 அன்று திரு.எஸ்.முப்பிடாரி, ஊரக வளர்ச்சி இணை இயக்குநர் அவர்கள் ஓய்வு பெற்றதால் ஏற்பட்ட காலிப்பணியிடம் மற்றும் அரசாணை(நிலை)எண்.564, நிதி(எப்.சி.4) துறை, நாள் 23.12.2009ன்படி நான்காவது மாநில நிதிக் குழுவில் ஊரக வளர்ச்சி இணை இயக்குநர் நிலையில் (Executive Consultant) நிரப்பப்பட வேண்டிய ஒரு பணியிடத்தினையும் தற்காலிகமாக நிரப்ப ஏதுவாக ஊரக வளர்ச்சி இணை இயக்குநர் நிலைப் பணியிடங்களுக்கான, 2009–10ஆம் ஆண்டிற்கான கூடுதல் தற்காலிக தேர்ந்தோர் பெயர்ப் பட்டியல் வெளியிட வேண்டி அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் பரிந்துரையினை அரசு கவனமாக ஆய்வு செய்து, கீழ்க்காணும் இரண்டு ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் நிலை அலுவலர்களை தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளின் பொது விதிகளில் விதி 39(a)(i)ன்கீழ் அதில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, முற்றிலும் தற்காலிகமாக ஊரக வளர்ச்சி இணை இயக்குநர்களாகப் பதவி உயர்வு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

| வ.எண். | பெயர் (திருவாளர்கள்) |
|---|---|
| 1. | எ.வி.ஞானசேகரன் |
| 2. | எ.பிரிதிவிராஜ் |

4. மேலே பத்தி 3ல் குறிப்பிட்டுள்ள இரண்டு ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் நிலை அலுவலர்களை ஊரக வளர்ச்சி இணை இயக்குநர் பணியிடத்தில் காலியாக உள்ள பணியிடங்களுக்கு உட்பட்டு தற்காலிகத் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலின் அடிப்படையில் வரிசைக்கிரமமாக, தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணி விதிகளில், பொது விதி 39(a)(i)ன்கீழ், அதன் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, ஊரக வளர்ச்சி இணை இயக்குநர்களாக தற்காலிகமாகப் பதவி உயர்வு அளித்து அரசு ஆணையிடுகிறது. இவர்களுக்கு பணியிடம் வழங்கி ஊரக வளர்ச்சி இணை இயக்குநர் நிலையில் பணியமர்த்த உரிய முன்மொழிவுகளை உடன் அனுப்பி வைக்க ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். ஊரக வளர்ச்சி இணை இயக்குநர்

பதவி உயர்வு அளிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர்கள், ஊரக வளர்ச்சி இணை இயக்குநர் பணியிடத்தில் காலிப் பணியிடங்கள் இல்லாத நிலையில் எவ்வித முன்னறிவிப்புமின்றி ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர்களாகப் பதவி இறக்கம் செய்யப்படுவார்கள் என்றும் இதன் மூலம் அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 3–ல் கண்ட, தற்காலிகமாக ஊரக வளர்ச்சி இணை இயக்குநர் பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ள அலுவலர்களின் பணியினை வரும் 2010–11ஆம் ஆண்டில் ஊரக வளர்ச்சி இணை இயக்குநர் பணியிடங்களுக்கான முறையான தேர்ந்தோர் பெயர்ப் பட்டியல் வெளியிடும் பொழுது, மேற்குறிப்பிட்ட ஊரக வளர்ச்சி இணை இயக்குநர் பணியிடங்களை, காலிப் பணியிடங்களாகக் கருதி தேர்ந்தோர் பெயர்ப் பட்டியல் வெளியிட்ட பின்னர் தகுதியின் அடிப்படையில் வரன்முறை செய்யப்பட வேண்டும் என்றும் இதன் மூலம் அரசு ஆணையிடுகிறது.

6. தற்காலிக ஊரக வளர்ச்சி இணை இயக்குநர் பதவி உயர்வு பெறும் திரு.எ.வி.ஞானசேகரன் மற்றும் திரு.எ.பிரிதிவிராஜ் ஆகியோர்கள் ஊரக வளர்ச்சி இணை இயக்குநருக்கானப் பதவி உயர்வு பெற முழுத் தகுதியும் பெற்றுள்ளார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
சம்பந்தப்பட்ட அலுவலர்கள்
<u>வழி</u> ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15
சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
சம்பளம் மற்றும் கணக்குகள் துறை இயக்குநர், சென்னை–15.
சம்மந்தப்பட்ட மாவட்ட கரூவூல அலுவலர்கள்
மாநில கணக்காயர், சென்னை–6/18 (கணக்கு/தணிக்கை)
**நகல்**
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
முதன்மைச் செயலரின் தனிச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றம் ஊராட்சித் துறை, சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்